# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 02.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- ‘மிஷன் சத்யா நிஷ்தா (Mission Sathyanishtha) திட்டம் - இந்திய இரயில்வேத் துறை அமைச்சகமானது, இரயில்வே ஊழியர்கள் பணியிடத்தில் நல்ல நெறிமுறைகளை (Good ethics) கடைபிடிக்கவும், உயர் தரத்திலான நேர்மையை (High Standards of Integrity) பின்பற்றவும் அவர்களுக்கு பயிற்சி அளிக்க ‘மிஷன் சத்யா நிஷ்தா’ திட்டத்தை தொடங்கியுள்ளது.




- ‘மொமைல் திஹார் (Mobile Tihar) திருவிழா – சத்தீஸ்கர் மாநில அரசானது, கிராமப்புறங்களில் உள்ள 45 லட்சம் பெண்கள் மற்றும் 5 லட்சம் மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் வழங்குவதற்காக ‘மொபைல் திஹார்’ திருவிழா நடத்தப்பட்டது.
    - இந்த திருவிழா அம்மாநிலத்தின் ‘சன்சார் கிராந்தி யோஜனா’(Sanchar Kranti Yojana) திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.




- நாட்டில் முதல் முறையாக உயிரி எரிபொருள் கொள்கையை (Bio – Fuel Policy) 'ராஜஸ்தான்' மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- **இலக்கு**
    - 2030ம் ஆண்டிற்குள் அனைத்து வாகனங்களிலும் 20 சதவீதம் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் மற்றும் 5 சதவீதம் பயோ டீசல் கலக்கப்பட்ட டீசல் போன்றவை எரிபொருளாக உபயோகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



- சேவ் போஜ் யோஜனா (Seva Bhaj Yojana) மத்திய கலாச்சார அமைச்சகம் (Ministry of Cultural) சேவ் போஜ் யோஜனா திட்டத்தை ஆகஸ்ட் 01, 2018 முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது.
- **குறிப்பு**
    - மத்திய கலாச்சார அமைச்சகமானது மக்களுக்கு இலவச உணவினை வழங்குகின்ற அனைத்து மத தொண்டு நிறுவனங்களுக்கும் (Charitable Religious Institutions) சிறப்பு நிதியியல் உதவியினை வழங்க திட்டத்தை தொடங்கியுள்ளது.
    - தகுதியுடைய தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் கண்டிப்பாக (DARPAN.Portal-ல்) பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும்




**உலக நிகழ்வுகள்**

- ஐக்கிய நாடுகள் அவை வெளியிட்டுள்ள, 2018 மின் - ஆளுமைக் குறியீட்டு பட்டியலில் (United nation's E Government Index – 2018) மொத்தம் 193 நாடுகளில் இந்தியா 96வது இடத்தைப் பெற்றுள்ளது.
    - டென்மார்க் நாடு, 2018-மின் ஆளுமைக் குறியீடு பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.




- உலக வானியல் நிறுவனத்தின் (WMO) சார்பாக வியட்நாம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய ஆசிய நாடுகளுக்கு வெள்ள முன்னறிவிப்பு (Advance warning of floods) அறிவிப்பதற்கான தலைமை மையமாக (Modal Agency) இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - WMO – World Meteorological Organization



## விருதுகள்

- 3வது பிரிக்ஸ் நாடுகளுக்கிடையேயான திரைப்பட திருவிழா (BRICS Film Festival) தென் ஆப்பிரிக்கா நாட்டின் 'டர்பன்' (Durban) நகரில் நடைபெற்று முடிந்துள்ளது.
    - இதில் இந்திய திரைப்படமான 'நியூட்டன்' (Newton) சிறந்த திரைப்படமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- கணிதவியல் துறையில் சிறப்பாக பங்காற்றியதற்காக ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தியரான 'அக்சய வெங்கடேஷனுக்கு கணிதவியலின் நோபல் பரிசு என்றழைக்கப்படும் பீல்டு மெடல் வழங்கப்பட்டுள்ளது.



## நியமனங்கள்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான சீமா நந்தா ஜனநாயக தேசியக் குழுவின் (Democratic National Committee)

முதன்மை செயல் அலுவலகராக நியமிக்கப்பட்டுள்ளார்.




**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- Wow – செயலி – பெண்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க மற்றும் மேம்படுத்த இந்திய தொழில் வர்த்தக சபையின் (FICCI) பெண்கள் பிரிவு சார்பில் 'Wow' என்னும் செயலி சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
    - Wow- Wellness For Woman



**முக்கிய தினங்கள்**

- தேசிய காகித தினம்(National Papers Day)
    - இந்தியாவில் முதன் முறையாக 2018 ஆகஸ்ட் 1-ல் காகித தினம் கொண்டாடப்படுகிறது.
    - 1940- ஆகஸ்ட் 1-ம் தேதி, ஜவஹர்லால் நேரு புனேயில் 'பேப்பர் டெல்ஸ்' என்ற கைவினை காகித ஆலையை தொடங்கி வைத்தார்.
    - இந்தியாவின் முதல் காகித ஆலை துவங்கப்பட்டதன் அடையாளமாக காகித தினம் கடைபிடிக்கப்பட்டுள்ளது.



**வர்த்தக நிகழ்வுகள்**

- பண வீக்கம் காரணமாக, மத்திய ரிசர்வ் வங்கியானது ரெப்போ ரேட்டை 0.25 சதவீதம் உயர்த்தி 6.50 சதவீதமாக நிர்ணயித்துள்ளது.
- **குறிப்பு** (ரெப்போ ரேட்)
  - ரிசர்வ் வங்கியானது, அரசு வணிக வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கு நிர்ணயிக்கப்படும் வட்டி விகிதம் ரெப்போ ரேட் என்றழைக்கப்படுகிறது.




We Shine Academy ™